**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, நாகப்பட்டினம்**

முன்னிலை : திரு. J. ஆன்ஸ் ராஜா, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், திருக்குவளை

நீதித்துறை நடுவர் எண் 1, நாகப்பட்டினம்.(மு.கூ.பொ)

2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 20 -ம் நாள், திங்கள் கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.923/2025**

**CNR No: TNNG02- 003899 -2025**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண் (Name of the Police Station and Crime Number of offence) | நாகப்பட்டினம் நகர காவல் நிலையம், குற்ற எண்.369/2025 |
| 2. | எதிரியின் பெயர் (Name) | A1- அழகர்(57/25) த/பெ பாலகுரு வடக்கு தெரு, ஜெகநாதபுரம், மஞ்சக்கொல்லை, நாகப்பட்டினம்.<br><br>A2- அருள்பிரகாஷ்(எ) அருண்பிரகாஷ் (25/25), த/பெ அழகர், வடக்கு தெரு, ஜெகநாதபுரம், மஞ்சக்கொல்லை, நாகப்பட்டினம்.<br><br>A3-அறிவழகன்(35/25) த/பெ அழகர் வடக்கு தெரு, ஜெகநாதபுரம், மஞ்சக்கொல்லை, நாகப்பட்டினம். |
| 3. | எதிரியின் தந்தை (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Date of Occurrence) | 12.08.2025 |
| 8. | புகார் தேதி (Complaint date) | 13.08.2025 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் (Apprehension date) | - |

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.20 19:17:47 +0530

| | | |
|---|---|---|
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on bail | Anticipatory Bail - A1 to A3-10.11.2025 |
| 11. | Commitment | Nil |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of trial) | 25.06.2026 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of trial) | 25.06.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence of Order) | 20.07.2026 |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு(Service of copy Judgment of finding on Accused) | எதிரிகளுக்கு எதிரான 296(b), 118(1), 351(3) BNS ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகளை பிரிவு 271(1)-BNSS ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் வழக்கு சொத்துகள் ஏதும் இல்லாததால் அதுகுறித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.<br><br>இவ்வழக்கில் எதிரிகள் மற்றும் எதிரிகளின் ஜாமின்தாரர்கள் எழுதிக்கொடுத்த பிணை ஆவணங்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | Nil |

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.20 19:17:55 +0530

| | | |
|---|---|---|
| 17. | பிரிவு 351(1)(b) BNSS-ன் கீழ் எதிரிகளை விசாரணை செய்த நாள் (Date of examination of accused U/s.351(1)(b) BNSS) | 02.07.2026 |
| 18. | எதிரி தலைமறைவான விபரம் (Details of abscondence of accused) | Nil |
| 19. | எதிரியின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் (Date of Examination in chief and cross examination of witnesses) | Witnesses / Chief / Cross<br>PW1 / 25.06.2026 / 25.06.2026<br>PW2 / 25.06.2026 / 25.06.2026 |
| 20. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட பல்வகை மனுக்கள் (Filing of miscellaneous petitions) | Nil |
| 21. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் (Date of filing of final report) | 24.12.2025 |
| 22. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த விபரம் (Period of Remand of Accused) | Nil |
| 23. | மேலமை நீதிமன்றத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் (Grant of stay by superior Courts and the results thereof; and) | Nil |
| 24. | பாதிக்கப்பட்ட நபருக்கான இழப்பீடு உத்தரவு விபரம் (Details of Victim compensation order) | Nil |

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.20 19:18:05 +0530

**********

இவ்வழக்கானது 24.12.2025-ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 20.07.2026-ம் தேதியன்று என் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசுத்துறை வழக்கறிஞர் நிலை எண்.2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. C. விஜயராகவன்,B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதம் மற்றும் ஆவண சாட்சியங்களை பரீசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

இவ்வழக்கின் வாதியான சுரேஷ் என்பவர் நாகப்பட்டினம் வெளிப்பாளையம் பேருந்து நிலையம் அருகே உள்ள ஒயின்ஷாப்பில் மது அருந்தி கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரிகள் மூவரும் வாதியை பார்த்து எங்கடா வேலை பாக்குற என்னடா மயிறு வேலை பாக்குற என ஆபாசமாக திட்டியபோது வாதி மரியாதையா பேசு என கூறியதற்கு உனக்கு என்னடா மரியாதை என வாதியை கீழே தள்ளிவிட்டதனை தொடர்ந்து அன்றைய தினமே நாகப்பட்டினம் மாங்கொட்டை சாமி கோவில் பின்புறம் உள்ள தனது வீட்டு வாசலில் வாதி நின்று கொண்டிருந்தபோது எதிரிகள் மூவரும் வாதியை அரிவாள் மற்றும் இரும்பு கம்பியால் அடித்து வாதிக்கு மண்டை உடைந்து இரத்தக்கயாம் ஏற்பட்டும், முதுகில் கீரால் காயத்தினை எற்படுத்தியும் இன்னைக்கு தப்பிச்சிட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.20 19:18:14 +0530

விடுத்திருந்ததாகவும் குறிப்பிட்டு நாகப்பட்டின நகர காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அரசு தரப்பில் எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 230 BNSS கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின், அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து, எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு விளக்கி, வினவ, பொய் வழக்கு என்றும், தான் குற்றவாளி இல்லை என்றும் மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு அரசு தரப்பில் 1 முதல் 2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் யாதொரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4. <u>**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**</u>

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சுரேஷ் தனது சாட்சியத்தில் கடந்த வருடம் ஒரு நாள் இரவில் சுமார் 09.30 மணியளவில் வெளிப்பாளையம் பஸ் ஸ்டான்ட் அருகே உள்ள ஒயின் ஷாப்பில் மது அருந்தி கொண்டிருந்தபோது தனது

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.20 19:18:22 +0530

அருகில் இருந்த சில நபர்கள் தன்னிடம் பிரச்சனை செய்ததாகவும், அவர்களிடம் இருந்து தப்பித்து சென்றதாகவும்,அதனை தொடர்ந்து தனது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்போது மேற்படி நபர்கள் தன்னை ஆபாசமான வார்த்தைகளால் திட்டி, இரும்பு கம்பியால் அடித்து பிரச்சனை செய்ததாகவும் அது தொடர்பாக போலிசாரிடம் புகார் கொடுத்ததாகவும், போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.1-ன் மூலமாக புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1-னின் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கின் அ.சா.2 - திரு. ஜெயராமன் - காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் கடந்த 13.08.2025 ம் தேதி நாகப்பட்டினம் ஒரத்துார் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு உள்நோயாளியாக இருந்த அ.சா.1 - சுரேஷ் என்பவர் அளித்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் முதல் தகவலறிக்கை பதிவு செய்து அன்றைய தினமே சம்பவயிடத்திற்கு சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்திருந்ததாகவும், அ.சா.1 ற்குரிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று ஆகிய மருத்துவ ஆவணங்களை பரிசீலித்து, சாட்சிகளை தனிதனியே விசாரித்து புலன் விசாரணை முடித்து இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டு சாட்சிமளித்துள்ளார். மேலும் அ.சா.2-ன் மூலமாக புகார் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம், அ.சா.1- சுரேஷ் என்பவரது விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று ஆகிய சான்றாவணங்கள்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.20 19:18:28 +0530

முறையே அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.7 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அரசுத்தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

9. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் கேள்வி எழுப்ப பொய் சாட்சி என்றும். வழக்கு குறித்து கேள்வி எழுப்ப பொய் வழக்கு என்றும் மறுத்துரைத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறப்பட்டு, சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

10. எனவே, எதிரிகளுக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

11. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

12. அ.சா.1 ஆன சுரேஷ் என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 12.08.2025 ம் தேதி இரவு சுமார் 09.30 மணிக்கு நாகப்பட்டினம் வெளிப்பாளையம் பேருந்து நிலையம் அருகே உள்ள ஒயின்ஷாப்பில் மது அருந்திகொண்டு இருந்தபோது பக்கத்தில் தனக்கு தெரிந்த ஜெகநாதபுரத்தை சேர்ர்ந்த பாலகுரு என்பவரது மகன் அழகர் என்பவர் மது

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.20 19:18:38 +0530

அருந்திகொண்டு என்னை முறைத்து எங்கடா வேலை பாக்குற என கேட்டபோது விழுந்தமாவடியில் உள்ள சுவீட் கடையில் வேலை செய்வதாக சொன்னதாகவும், அதற்கு 1வது எதிரி என்னடா மயிறு வேலை பாக்ககுற என தகாத வார்த்தையில் பேசியதாகவும், மரியாதையா பேசு என அ.சா.1 கூறியதற்கு உக்கு என்னடா மரியாதை வேண்டி கிடக்கு என திட்டி தன்னை கீழே தள்ளிவிட்டதாகவும் தான் கீழே கிடந்த சரக்கு பாட்டிலை எடுத்து தலையில் அடித்துவிட்டு வீட்டிற்கு வந்ததாகவும், அதனை தொடர்ந்து அ.சா.1 தனது வீட்டி வாசலில் நின்றுகொண்டிருந்தபோது எதிரிகள் மூவரும் மற்றும் ஒருவருடன் அரிவாள் மற்றும் இரும்பு கம்பியுடன் வந்து அடித்ததாகவும், அதில் தனக்கு மண்டை உடைந்ததாகவும், முதுகிலும் கீரல் காயம் ஏற்பட்டு தான் சத்தம் போட்டபோது மேற்படி நால்வரும் அக்கம்பக்கத்தினர் ஓடிவருவதை பார்த்து இன்னைக்கு தப்பிச்சுக்கிட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என மிரட்டல் விடுத்து ஓடிவிட்டதாகவும் அரசுத்தரப்பால் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

13. மேற்படி அ.சா.1 தனது புகார் மனுவில் கடந்த 12.08.2025 ஆம் தேதி வெளிப்பாளையம் மதுபான கடையில் மது குடித்துக் கொண்டிருந்தபோது 1 வது எதிரிக்கும், வாதிக்கும் வாய் தகராறு ஏற்பட்டு வாதியை பார்த்து என்னடா மயிறு வேலை பாக்குற என்று கெட்ட வார்த்தைகளால் திட்டியும், இரவு 09.30 மணிக்கு 2 மற்றும் 3 எதிரிகளுடன் வந்து வாதியை அருவாளால் வெட்டியும், மற்ற இரண்டு எதிரிகளும் இரும்பு கம்பியால் வாதியை அடித்ததாகவும் புகார் மனுவில்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.20 19:18:48 +0530

கூறியுள்ளார். ஆனால் அ.சா.1 அவரது சாட்சியத்தில் கடந்த வருடம் ஒரு நாள் இரவில் சுமார் 09.30 மணியளவில் வெளிப்பாளையம் பஸ் ஸ்டான்ட் அருகே உள்ள ஒயின் ஷாப்பில் மது அருந்தி கொண்டிருந்தபோது தனது அருகில் இருந்த சில நபர்கள் தன்னிடம் பிரச்சனை செய்ததாகவும், அவர்களிடம் இருந்து தப்பித்து சென்றதாகவும்,அதனை தொடர்ந்து தனது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்போது மேற்படி நபர்கள் தன்னை ஆபாசமான வார்த்தைகளால் திட்டி, இரும்பு கம்பியால் அடித்து பிரச்சனை செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். 1 முதல் 3 வரையிலான எதிரிகள் ஆபாசமாக பேசினார்கள் என்றோ, இரும்பு கம்பியால் அடித்தார்கள் என்றோ சாட்சியமளிக்கவில்லை. மேலும், அரசு தரப்பால் எதிரிகள் தான் குற்றவாளிகள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை.ஆகவே எதிரியானவர்கள் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட தகுதியுடையவர் ஆகிறார்.

14. இறுதியாக, 1 முதல் 3 வரையிலான எதிரிகளுக்கு எதிரான பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகளை பிரிவு 271(1) BNSS ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

15. இவ்வழக்கில் எதிரிகள் மற்றும் எதிரிகள் ஜாமின்தாரர்கள் எழுதிக் கொடுத்த

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.07.20 19:18:57 +0530

பிணை ஆவணங்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.20 19:19:03 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
நாகப்பட்டினம்.(மு.கூ.பொ)

<u>இணைப்பு</u>:

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>

| | |
|---|---|
| அ.சா.1. | திரு. சுரேஷ் (நிகழ்நிலை புகார்தாரர்) |
| அ.சா.2. | திரு. ஜெயராமன் -(சிறப்பு உதவி ஆய்வாளர்) |

<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்</u> :

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 13.08.2025 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 13.08.2025 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | 13.08.2025 | முதல் தகவலறிக்கை |
| அ.சா.ஆ.4 | 13.08.2025 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 13.08.2025 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 12.08.2025 | அ.சா.1 - சுரேஷ் என்பவரதுவிபத்து பதிவேடு |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.7 | 20.08.2025 | அ.சா.1 - சுரேஷ் என்பவரது காயச்சான்று |

அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருட்கள் - இல்லை

எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள் - இல்லை

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.20 19:19:12 +0530

நீதித்துறை நடுவர் எண்.1

நாகப்பட்டினம்.(மு.கூ.பொ)

நகல்

மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம் அவர்களுக்கு

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. இந்த தீர்ப்புரையின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

2. இந்த வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இந்த வழக்கின் எதிரி விசாரணையின் போது பிணையில் இருந்தார்.

4. இவ்வழக்கில் சான்று பொருட்கள் ஏதும் இல்லாததால் அதுகுறித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.